நாள்..14.2.2019

O.S. 91/2011

வா.சா.1

திரு. கொளந்தை (எ) கருப்பன்

சத்தியப்பிரமாணம் பெறப்பட்டது

முதல் விசாரணை

நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும். 13.,06.2006 தேதிய அசல் வழக்கு 7/2005ன் தீர்ப்பாணை **வா.சா.ஆ.1**. 27.08.09 தேதிய 1ம் பிரதிவாதி தயாரித்த மோசடி கிரைய ஆவணம் **வா.சா.ஆ.2** 17.3.2010 தேதிய மோசடி பிழைதிருத்த ஆவணம் **வா.சா.ஆ.3,** 22.08.2011 தேதிய தருமபுரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் கொடுத்த புகார் **வா.,சா.ஆ.4,** 17.4.2016 அன்று எதிர்வாதிகள் பெயரில் கொடுத்த புகார்மற்றும் ரசீது **வா.சா.ஆ.5,** மேற்படி 1ம் பிரதிவாதி தயாரித்த பத்திரம் மோசடியானது, செல்லாது என பரிகாரம் வழங்க கோருகிறேன்.

குறுக்கு விசாரணை

2011 ஆம் வருடம் பிரதிவாதிகள் மீதுஆவணத்தை ரத்து செய்ய கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதிகள் 2 முதல் 4 அரகாசனஅள்ளியை சேர்ந்தவர்கள். அவர்கள் என்னை அடித்து உதைத்ததால் வழக்கில் சேர்த்துள்ளேன். அர்த்தனாரிக்கு தோஸ்தாக வந்ததால் அவர்களை சேர்த்துள்ளேன். சித்ரவதை செய்தார்கள். 1ம் பிரதிவாதி மோசடி செய்த கிரைய பத்திரம், பிழைதிருத்த பத்திரம் நகல் எடுத்து காவல் நிலையத்தில் கொடுத்த புகாருடன் சேர்த்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். ஆள்மாறாட்டம் செய்து மோடி செய்தது குறித்து மனு எதுவும் பதிவாளர் அலுவலகத்தில் ரத்து செய்ய மனு கொடுத்தேனா என்றால் இல்லை. மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகத்தில் கொடுத்த புகாரின் பேரில் நடவடிக்கை எடுக்கவில்லை. அதனால் நீதிமன்றத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்தேன். சார்பதிவாளரை நர்ன இந்த வழக்கில் பிரதிவாதியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். சார்பதிவாளரை சேர்க்காததால் வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண் 7/2005 வழக்கில் சம்மன் பிரதிவாதிகளுக்கு சார்வு ஆகவில்லை என்றோ EP மனுவில் சம்மன் பெற்ற பிறகு தான் மேற்படி வழக்கு பற்றி பிரதிவாதிகளுக்கு தெரிய வந்தது என்றால் சரியல்ல. 2011ல் பத்திரத்தை ரத்து செய்ய பொதுவர்களை வைத்து கேட்டேன் என்று சொன்னால் அது தவறு. கிரைய பத்திரம் மற்றும் பிழைதிருத்த பத்திரம் நான் முறைபடி பதிவாளர் அலுவலகம் சென்று பதிவு செய்து கொடுத்து சுவாதீனம் ஒப்படைத்தேன் என்றும் வழக்கிற்காக மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கிரைய பத்திரத்தில் சொத்தனாது ரூபாய் 24000/ பெற்று கொண்டு கிரையம் செய்ததாக உள்ளது என்றால் சரியல்ல. அதன் பிறகு 15.02.2010ல் 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா பெறப்பட்டது

என்றால் சரியல்ல. நிலத்திற்கு மதிப்பு அதிகம் ஆனதால் எனது மனைவி மற்றும் மக்களின் துண்டுதல் பேரில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அர்த்தனாரி நாகாவதி ஆற்று வழியாக தணணீர் எடுத்து செல்வதாக சொல்வது பொய். வீடு வேறு இடத்திலும், நிலம் வேறு இடத்திலும் உள்ளது. 1995முதல் 2009 வரை 1ம் பிரதிவாதியின் சுவாதீனத்தில் இருந்து 2009ல் முறைபடி கிரையம் பெற்று 1ம் பிரதிவாதி பெயரில் ஆவணங்கள் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. சுவாதீனம் ஒப்படைக்க கோராமல் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு நிலைக்கதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. 27.08.2009 தேதியில் ஏற்பட்ட ஆவணம் முறைபடி ஏற்பட்டது என்றும் வழக்கு சொத்தின் மதிப்பு அதிகம் ஆகிவிட்டதால் இந்த வழக்கு நிலைக்கதக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. 27.08.2009 தேதியில் ஏற்பட்ட ஆவணம் முறைபடி ஏற்பட்டது என்பதால் நான் கோரிய ரத்து செய்ய வேண்டும் என்ற பரிகாரம் வழங்க இயலாது என்று சொன்னால் சரியல்ல. 2 முதல் 4 பிரதிவாதிகள் தேவையில்லாத தரப்பினர்கள் என்றும் வேண்டும் என்றே வழக்கில் சேர்த்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. 27.08.2009 தேதியில் ஏற்பட்ட ஆவணம் முறைபடி ஏற்பட்டது என்பதால் அதை விற்பதற்கு வேறு வகையில் ஏற்பாடு செய்யவும் 1ம் பிரதிவாதிக்கு முழு உரிமை உள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் வெளியூரில் இருந்து திருமப வந்து விட்டதால் பிரதிவாதிகளிடமிருந்து எப்படியாவது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சார்பதிவாளரை சேர்க்காததாலும் 27.08.2009 தேதியில் ஏற்பட்ட ஆவணம் முறைபடி ஏற்பட்டது என்பதாலும் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் பட்டா எண், சர்வே எண் தெரியாது. எழுத படிக்க தெரியாது. அசல் வழக்கு 7/2005 உள்ள சொத்தின் அளவும், இந்த வழக்கின் சொத்தின் அளவும் ஒரே அளவு தான். மேற்படி இரண்டு வழக்கிலும் சொத்து விவரம் அமாறுபட்டு உள்ளதால் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா வழங்க கூடாது என்று வட்டாட்சியரிடம் ஆட்சேபனை மனு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. உண்மையான பத்திரம் என்பதால் வட்டாட்சியரிடம் மனு எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பொய் வழக்கு என்றும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** .. 20 சென்ட் என்பது வீட்டு இடம். விவசாய நிலம் இல்லை .2 முதல் 4 பிரதிவாதிகள் வா.சா.ஆ. 2 மற்றும் 3ல் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள்.

**மறு குறுக்கு விசாரணை** .. மேற்படி 2 முதல் 3 பிரதிவாதிகள் பென்னாகரம் காவல் நிலையத்தில் வைத்து சாட்சி கையொப்பம் போட்டார்கள். பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்/கொளந்தை (எ) கருப்பன்

ஒம்/திருமதி.ஜி.கலைவாணி
உரிமையியல் நீதிபதி